**<u>மணப்பாறை நகராட்சி</u>**

**2020- ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் (17.12.2020) 17 - ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 17.12.2020 | **பொருள் - 1**<br>மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனமான வார காய்கனி சந்தை வசூலிக்கும் உரிமம்(2018-2021) உத்திரவு நாள்.22.02.2018-ல் திரு.சி.ரெங்கராஜ், (எண்.5, புதுத்தெரு, மாகாளிக்குடி, சமயபுரம், திருச்சி) என்பவருக்கு வழங்கப்பட்டது. மேற்கண்ட குத்தகைதாரர் 2020-21-ல் மூன்றாம் ஆண்டிற்கான குத்தகை உரிமம் செலுத்தக்கோரி அலுவலக அறிவிப்பு நாள்.26.02.2020, 20.05.2020, 02.11.2020, 19.11.2020 மற்றும் Letter 30.11.2020-ல் குத்தகைதாரருக்கு அனுப்பப்பட்டது. மேற்படி குத்தகைதாரரின் கடித நாள்.19.11.2020-ல் கொரோனா நோய் தொற்று காரணமாக வாரக்காய்கனி சந்தை நடத்தப்படவில்லை எனவும் தான் செலுத்திய முன்வைப்புத் தொகையினை திரும்ப வழங்கவும் கோரியுள்ளார். குத்தகை பொது நிபந்தனைகளின் வரிசை எண்.23(ஆ) மற்றும் 82-ல் குத்தகைதாரர் பகிரங்க ஏலத்தில் / டெண்டரில் உயர்ந்த பட்ச ஏலம் கோரியவர்கள் தன்னால் மேற்கண்ட இனத்தினை நடத்த இயலாது எனறோ அல்லது உடல்நிலை காரணமாக நடத்த இயலாது என்றோ அல்லது வேறு எந்த காரணத்தினாலும் ஏலத்தில் உச்சக்கேள்வி கேட்ட இனத்தை நடத்த இயலாது என்று கோரி தன்னால் கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச கேள்வித் தொகையை ரத்து செய்யுமாறு கோரப்பட்டால் அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும் உயர்ந்தபட்ச கேள்விதாரர் டெண்டரில் ஏலத்தினை மறு ஏலம் விடுதலோ அல்லது இரண்டாவது உயர்ந்த கேள்விதாரருக்கு ஏல இனத்தை ஒப்படைத்தாலோ அதனால் நகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பிற்கு உயர்ந்தபட்ச ஏல கேள்விதாரரே பொறுப்பாவதுடன் அன்னாரால் செலுத்தப்பட்ட அனைத்து பொறுப்புத் தொகை பறிமுதல் செய்வதுடன் மீதமுள்ள இழப்புத் தொகை நீதிமன்றம் மூலம் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், மேற்படி குத்தகை இனம் வார காய்கனிச்சந்தைக்கான கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை 18.12.2020 முதல் ரத்து செய்து பொது ஏலமிடவும் கீழ்க்குறிப்பிடப்பட்ட விவரத்திற்கு வைப்புத் தொகையை பறிமுதல் செய்து இழப்புத் தொகைகளுக்கு | **தீர்மான எண்..881 அனுமதிக்கப்பட்டது.** |

ஈடு செய்துகொள்ளவும், கூடுதலாக ஏற்படும் இழப்பு தொகைகளை வசூல் செய்ய நீதிமன்றம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும் இடைப்பட்ட காலங்களில் துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

| 1. | கேட்புத் தொகை | தொகை (ரூ) |
|---|---|---|
| | 2020-21 ஆம் ஆண்டிற்கு கேட்புத் தொகை | 611999/- |
| | காவலர் ஊதியம் | 75000/- |
| | மொத்தம் | 686999/- |
| 2. | அரசாணையின்படி, கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்ட காலமான 04/2020 மற்றும் 05/2020-ம் மாதத்திற்கு கழிக்க வேண்டிய தொகை | 103924.00/- |
| | ஒரு வடத்திற்கு 53 வாரம்<br>ஒரு வாரத்திற்கு 611999/53 = ரூ.11547.00/-<br>ஏப்ரல் மாதம் - 5 வாரம், மே மாதம் -4 வாரம்<br>9 வாரம் X 11547 = ரூ103924.00/- | |
| 3. | செலுத்த வேண்டிய கேட்பு | 583075/- |
| | 611999 - 103924 = 508075/- | |
| | காவலர் ஊதியம் =ரூ.75000/- | |
| | வருமான வரி = ரூ.5086/- | |
| | அரசால் அனுமதிக்கப்பட்ட தள்ளுபடி காலம் போக 01.06.2020 முதல் 09.12.2020 வரை குத்தகைதாரரின் பொறுப்பில் பறிமுதல் செய்யப்படும் தொகை | |
| 4. | முதலாம் ஆண்டு செலுத்திய முன்வைப்புத் தொகை | 400000.00/- |
| 5. | நிகரம் செலுத்த வேண்டிய கேட்புத்தொகை | 188161.00/- |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்

2) முன்வைப்புத் தொகையை பறிமுதல் செய்து வருவாய் நிதிக்கு மாற்றம் செய்யலாம்.

3) 16.12.2020 முதல் ஏலம் உறுதி செய்யப்படும் வரை நகராட்சி வருவாய் பணியாளர்களைக் கொண்டு துறை ரீதியாக வசூல் பணியை மேற்கொள்ளலாம்.

4) துறை ரீதியாக வசூல் பணி மேற்கொள்வதற்கான நிர்வாக செலவினங்களை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

5) 16.112020 முதல் 31.03.2021 முடிய உள்ள கேட்பினை ரத்து செய்யலாம்.

17.12.2020

**பொருள் -2**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அறிவுரை ந.க.எண்.857/2017/இ2 நாள்.19.06.2019-ல் இந்நகராட்சி பகுதியில் விழிப்புணர்வு பணிகள் நடத்த அனுமதி அளித்ததன் பேரில் இந்நகராட்சி பகுதியில் 10 இடங்களில் கலைநிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.878 நாள்.24.11.2020-ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதன் பேரில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை (நிகழ்ச்சி ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1 | மீரா சந்தானம், கிராமிய கலைக்குழு, வல்லம், தஞ்சாவூர். | 5000/- |
| 2 | திருமலை நாடக சபா,42,சங்கிலிகோயில்சந்து, கள்ளத் தெரு, திருச்சி-8. | 7000/- |
| 3 | புதுகை சங்கமம், மல்டிமீடியா, கல்சுரஸ் குரூப், பெரம்பலூர், கிள்ளாதூர் (PO). புதுக்கோட்டை மாவட்டம். | 7200/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய மீரா சந்தானம் கிராமிய கலைக்குழு விலைப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

அனுமதிக்கலாம் (ந.க.எண்.1261/2019/எச்2)

**தீர்மான எண்..882**
**அனுமதிக்கப்பட்டது.**

---

17.12.2020

**பொருள் -3**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.18, மஸ்தான் தெரு மற்றும் வார்டு 13 காந்தி நகர் தெருவில் மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே புதிதாக மழைநீர் வடிகால் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.18,13 மஸ்தான் தெரு மற்றும் காந்திநகர், குறுக்கு சாலைகளில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 5.00 |

மேற்கண்ட பணியினை பொது நிதி 2020-21-ன் கீழ் பணிகள் மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : 1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்..883**
**அனுமதிக்கப்பட்டது.**

<table>
<tr>
<td>17.12.2020</td>
<td>
பொருள் -4<br>
இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.21, லெட்சுமி நாராயணன் நகர் தெருவில் பேவர் பிளாக் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு<br>(ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>வார்டு எண்.21, லெட்சுமி நாராயணன் நகர் தெருவில் பேவர் பிளாக் அமைத்தல்</td><td>6.00</td></tr>
</table>
மேற்கண்ட பணியினை பொது நிதி 2020-21-ன் கீழ் பணிகள் மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u> : 1.மன்றம் அனுமதி வழங்கலாம்
</td>
<td>தீர்மான எண்..884<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>17.12.2020</td>
<td>
பொருள் -5<br>
நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20452/2020/ LA3 நாள்.17.11.2020-ன் படி 15-வது CFC நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் குடிநீர் திட்டம் சம்மந்தமான பணிகளை எடுத்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளதால் கீழ்க்கண்ட பணிகளை 15 CFC நிதியின் கீழ் செய்து கொள்ளவும் உரிய அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.<br>எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு<br>(ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>அண்ணாவிநகர், காட்டுப்பட்டி பகுதியில் பகிர்மான குழாய் அமைத்தல்</td><td>9.90</td></tr>
<tr><td>2</td><td>இந்நகராட்சிகுட்பட்ட வார்டு எண்.1 முதல் 27 முடிய உள்ள விடுப்பட்ட பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல்</td><td>9.90</td></tr>
<tr><td>3</td><td>இந்நகராட்சிகுட்பட்ட பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிகளுக்கு ( 250 மிமீ 200மிமீ, 100மிமீ ,80மிமீ அளவுள்ள) சுலுயிஸ் வால்வு விநியோகம் செய்தல் மற்றும் நகரில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மினி பவர் பம்புகளுக்கு 1.50HP முதல் 2.00 HP திறன் கொண்ட நீர் மூழ்கி மின் மோட்டார் வாங்குதல்</td><td>9.95</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u> : 1.மன்றம் அனுமதிக்கலாம்<br>
2.செலவினத் தொகையை 15 CFC நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்
</td>
<td>தீர்மான எண்..885<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 17.12.2020 | **பொருள் -6**<br>மணப்பாறை நகராட்சிகுட்பட்ட பகுதியில் 2020-2021-ம் ஆண்டிற்கு நகராட்சி நடுநிலைப்பள்ளியின் கணினி வழி கல்வி கற்கும் முறைக்கு நவீன வகுப்பறை அமைக்கும் பணி (SMART CLASS ROOM) மேற்கொள்ளவும், வார்டு எண்.1 முதல் 27 வார்டுகளில் உள்ள சிறு மின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணி மேற்கொள்ளவும், மற்றும் LED பல்புகள் பொருத்துதல் மற்றும் விடுப்பட்ட மின் கம்பங்களில் மின்சார தெரு விளக்கு பொருத்துதல், மற்றும் இரண்டு (PATCH WORK) பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ள பணிகளை சம்மந்தப்பட்ட கல்வி நிதி, குடிநீர் நிதி, பொது நிதி ஆகிய நிதிகளிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்..886 அனுமதிக்கப்பட்டது.** |

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| | கல்வி நிதி | |
| 1 | மணப்பாறை நகராட்சியில் உள்ள திருச்சி சாலையில் உள்ள நகராட்சி நடுநிலை பள்ளி கணினி வழி கல்வி கற்கும் முறைக்கு நவீன வகுப்பறை அமைக்கும் பணி (SMART CLASS ROOM) | 9.96 |
| | குடிநீர் நிதி | |
| 1 | வார்டு எண் :1 முதல் 27 வார்டுகளில் உள்ள சிறு மின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணி. | 9.90 |
| | பொது நிதி | |
| 1 | வார்டு எண்.1 முதல் 27 வரை உள்ள மின் கம்பங்களில் 20 வாட்ஸ் LED பல்புகள் பொருத்துதல் மற்றும் விடுப்பட்ட மின் கம்பங்களில் மின்சார தெரு விளக்கு பொருத்தும் பணி. | 5.75 |
| 2 | வார்டு எண்.11 வாணக்காரன் தெரு மற்றும் வார்டு எண்.9 ஏட்டுத்தெரு சிமெண்ட் சாலை (PATCH WORK) அமைக்கும் பணி மற்றும் வார்டு எண்.5 மாரியம்மன் கோவில் தெருவில் BT PATCH WORK அமைக்கும் பணி. | 4.00 |

**அலுவலகக்குறிப்பு** :

மன்றம் அனுமதிக்கலாம்

<table>
<tr>
<td>17.12.2020</td>
<td>
பொருள் -7<br>
இந்நகராட்சியில் இயங்கிவந்த 5KVA ONLINE UPS 5 முதல் 6 வருடங்கள் வரையில் சிறந்த முறையில் இயங்கும் என்ற நிலையில், இந்நகராட்சியில் இயங்கி வந்த 5KVA ONLINE UPS, 10 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிவந்த நிலையில் தற்பொழுது பழுதடைந்து மீண்டும் பழுதுபார்க்க இயலாத நிலையில் உள்ளது. எனவே பழுதடைந்த 5KVA ONLINE UPS UNIT -யை கொடுத்துவிட்டு, அவசர அவசியம் கருதி புதிய ULTRA NET 5KVA ONLINE UPS வாங்கி நிறுவ உத்தேச செலவினம் ரூ.55000/- க்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
1.அனுமதிக்கலாம்<br>
2.செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3284/2020/அ1)
</td>
<td>தீர்மான எண்..887<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>17.12.2020</td>
<td>
பொருள் -8<br>
இந்நகராட்சியில் உள்ள அனைத்து பிரிவில் உள்ள பிரிண்டர்களிலும் பிரிண்ட் எடுப்பதற்கு பயன்படுத்தப்படும் HP 80A மற்றும் HP 88A Toner- களை Refill செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.30,000/-க்கும், செலவினத் தொகையினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு மற்றும் முடிவிற்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை ரூ. (HP TONER 80A) 1 No</th><th>தொகை ரூ. (HP TONER 88A) 1 No</th></tr>
<tr><td>1</td><td>GANAPATHY SYSTEM, $I^{ST}$ FLOOR, #48,8th CROSS, THILLAI NAGAR, MAIN ROAD, TRICHY.</td><td>ரூ.350/-</td><td>ரூ.375/-</td></tr>
<tr><td>2</td><td>NBS COMPUTERS, NO.64, THIRUVALLUVAR SALAI, MEAMBALAM, THANJAVUR-613001</td><td>ரூ.400/-</td><td>ரூ.425/-</td></tr>
<tr><td>3</td><td>SUMARAJ IT SOLLUTIONS, NO.637/2, SABARI STREET, IOB NAGAR, SIPCOT, VELLORE - 632403</td><td>ரூ.300/-</td><td>ரூ.300/-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :</u><br>
<u>1.</u>மன்றம் அனுமதிக்கலாம்<br>
2.வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள SUMARAJ IT SOLLUTIONS, NO.637/2, SABARI STREET, IOB NAGAR, SIPCOT, VELLORE என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண்..888<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 17.12.2020 | **பொருள் -9**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் 107 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிக்கு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை மூலம் 07.10.2020 அன்று நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் ஹிந்து, தமிழ் நாளிதழிலும் 29.10.2020 அன்று பைனான்சியல் எக்ஸ்பிரஸ் மற்றும் தினசெய்தி நாளிதழிலும் விளம்பரம் மேற்கொள்ளப்பட்டது. மேற்காணும் விளம்பரம் வெளியிட்ட ஐடியா பிராண்ட் சொலுசன், சென்னை நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.91823/- + ரூ.26040/- = ரூ.117863/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.74/2015/எச்1) | **தீர்மான எண்..889 அனுமதிக்கப்பட்டது.** |
| 17.12.2020 | **பொருள் -10**<br>மணப்பாறை நகராட்சியில் தினந்தோறும் உற்பத்தியாகும் மக்காத குப்பைகளான பிளாஸ்டிக் பொருட்கள் பீங்கான் இரப்பர் மற்றும் கட்டிட பொருட்களை இருப்பு வைப்பதற்காக Resource Recovery Centre அமைக்கும் பணி ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மதிப்பீட்டு ரேட்டைவிட 0.15% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.எஸ்.சண்முகம் மணப்பாறை அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணியினை பொது நிதியில் செய்வதற்கு போதிய நிதி ஆதாரம் இல்லாததால் பணியினை துவங்காமல் இருந்து வரப்பட்டது. தற்சமயம் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20452/2020/LA3 நாள்.17.11.2020-ன் படி 15-வது CFC நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் திடக் கழிவு மேலாண்மை திட்டத்திற்கு தேவையான பணிகளை எடுத்துக் கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளதால் மாட்டு சந்தையில் உள்ள நுண் உரக்குடில் மையத்திற்கு அருகில் Resource Recovery Centre அமைக்கும் பணியினை 15 CFC நிதியின் கீழ் செய்து கொள்ளவும் உரிய அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. செலவினத் தொகையை 15 CFC நிதியின் கீழ் மேற்கொள்ளலாம் | **தீர்மான எண்..890 அனுமதிக்கப்பட்டது.** |

17.12.2020

**பொருள் -11**

இந்நகராட்சிகுட்பட்ட பகுதியில் உள்ள வார்டு எண் :6,9 மற்றும் 13-ல் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின் விசைப்பம்பு அமைத்தல் பணி மேற்கொள்ள குடிநீர் நிதி 2019-20-ன் கீழ் பணி மேற்கொள்வதற்கு 20.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் :6,9 மற்றும் 13-ல் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின் விசைப்பம்பு அமைத்தல் | 9.90 | திரு.எஸ்.சண்முகம் | 0.01% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.ஜி.முரளி | 1. 30% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எஸ்.சண்முகம் 0.01% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிடவும் குறைவாக கொடுத்துள்ளார். எனவே திரு.எஸ்.சண்முகம் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>

(ந.க.எண்:559-1/2020/இ1)

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை வழங்கிய திரு.எஸ்.சண்முகம் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்..891**
**அனுமதிக்கப்பட்டது.**

17.12.2020

**பொருள் -12**

இந்நகராட்சிகுட்பட்ட பகுதியில் உள்ள வார்டு எண் :14,18 மற்றும் 19-ல் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின் விசைப்பம்பு அமைத்தல் பணி மேற்கொள்ள குடிநீர் நிதி 2019-20-ன் கீழ் பணி மேற்கொள்வதற்கு 20.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

**தீர்மான எண்..892**
**அனுமதிக்கப்பட்டது.**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் :14,18 மற்றும் 19-ல் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின் விசைப்பம்பு அமைத்தல் | 9.90 | திரு.எஸ்.சண்முகம் | 0.01% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.ஜி.முரளி | 1. 30% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எஸ்.சண்முகம் 0.01% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிடவும் குறைவாக கொடுத்துள்ளார். எனவே திரு.எஸ்.சண்முகம் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்:559-2/2020/இ1)
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை வழங்கிய திரு.எஸ்.சண்முகம் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

---

**17.12.2020**

**பொருள் -13**

இந்நகராட்சிகுட்பட்ட பகுதியில் உள்ள வார்டு எண் :20,21 மற்றும் 27-ல் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின் விசைப்பம்பு அமைத்தல் பணி மேற்கொள்ள குடிநீர் நிதி 2019-20-ன் கீழ் பணி மேற்கொள்வதற்கு 20.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் :20,21 மற்றும் 27-ல் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின் விசைப்பம்பு அமைத்தல் | 9.90 | திரு.எஸ்.சண்முகம் | 0.01% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.ஜி.முரளி | 1. 30% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எஸ்.சண்முகம் 0.01% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிடவும் குறைவாக கொடுத்துள்ளார். எனவே

**தீர்மான எண்..893 அனுமதிக்கப்பட்டது.**

| | | |
|---|---|---|
| | திரு.எஸ்.சண்முகம் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்:559-3/2020/இ1)<br>2. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை வழங்கிய திரு.எஸ்.சண்முகம் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**